# புள்ளி வழங்கும் திட்டம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019
## 32 - வணிகக்கல்வி
## (புதிய பாடத்திட்டம்)

### பரீட்சகர்களின் கவனத்திற்கு

விடைத்தாள் மதிப்பீடு தொடர்பான புள்ளி வழங்கும் இத்திட்டமானது பூரணமான விடைகளை உள்ளடக்கியதாகக் கருதப்படமாட்டாது. இதில் தரப்படும் விடயங்கள் புள்ளியிடலுக்கான ஒரு வழிகாட்டியாகவே அமையும் என்பதனை மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் பரீட்சகர்கள் புரிந்து கொள்ளுதல் வேண்டும். எனவே மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் பரீட்சகராகிய நீங்கள் இப்பாடம் தொடர்பில் பூரண அறிவு, கற்றல், கற்பித்தல் மற்றும் தனது அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சார்த்திகள் முன்வைத்துள்ள விடைகளை மிகவும் கவனமாகப் பரிசீலித்துப் புள்ளிகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். பரீட்சார்த்திகளின் எதிர்காலம் நீங்கள் வழங்கும் புள்ளிகளிலேயே தங்கியிருப்பதனால் இப்பணி தொடர்பில் நீதியாகவும், நேர்மையாகவும் இரகசியத் தன்மையைப் பேணுபவராகவும் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடுவதுடன் ஒருமைப்பாட்டினையும் பேணுவது பரீட்சகர்களாகிய உங்களது கடமையாகும்.

# க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

## 32 - வணிகக்கல்வி

வணிகக் கல்விப் பாடத்திட்டத்தின் மூலம் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை மதிப்பிடக்கூடியவாறும் மாணவர்களின் பாடம் தொடர்பான விடயங்கள், அறிவு தர்க்க ரீதியாக ஒப்பிட்டுப் பார்த்து வணிக அனுபவங்களையும், அவை செயற்படும் ஆற்றலையும், வணிக உலகின் போக்குகளையும், செயல்முறை தொடர்பான அறிவு மற்றும் தகவல் தொழிநுட்ப அறிவு போன்றவற்றையும் மிகவும் சிறந்த முறையில் மதிப்பிடுவதற்கு ஏற்ற வகையில் இவ்வினாப்பத்திரத்தில் வினாக்கள் வினவப்பட்டுள்ளன.

| புள்ளிகள் வழங்கப்படுவது தொடர்பான தொகுப்பு | | | |
|---|---|---|---|
| வினாப் பத்திரம் I | **50 வினாக்களைக் கொண்டது.** | 50 x 02 புள்ளிகள் வீதம் | **100 புள்ளிகள்** |
| வினாப் பத்திரம் II | **பகுதி I, பகுதி II ஆகியவற்றில் இருந்து ஆகக் குறைந்தது 2 வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை எழுதப்படல் வேண்டும்.** | | |
| பகுதி I | ஒவ்வொரு வினாவும் 5 பகுதிகள் x 04 புள்ளிகள் வீதம் 20 புள்ளிகளைக் கொண்டவையாகும். | | |
| 1ஆம் வினா<br>2ஆம் வினா<br>3ஆம் வினா<br>4ஆம் வினா | இரு வினாக்களைத் தெரிவு செய்தால் (2 வினாக்கள் x 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்) அல்லது மூன்று வினாக்களைத் தெரிவு செய்தால் (3 வினாக்கள் x 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகள்) வழங்கப்படும். | ∴ மொத்தம்<br>**40 புள்ளிகள்**<br>அல்லது<br>**60 புள்ளிகள்** | |
| பகுதி II | ஒவ்வொரு வினாவும் 5 பகுதிகள் x 04 புள்ளிகள் வீதம் 20 புள்ளிகளைக் கொண்டவையாகும். | | |
| 5ஆம் வினா<br>6ஆம் வினா<br>7ஆம் வினா<br>8ஆம் வினா | மூன்று வினாக்களைத் தெரிவு செய்தால் (3 வினாக்கள் x 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகள்) அல்லது இரு வினாக்களைத் தெரிவு செய்தால் (2 வினாக்கள் x 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்) வழங்கப்படும். | ∴ மொத்தம்<br>**60 புள்ளிகள்**<br>அல்லது<br>**40 புள்ளிகள்** | 100 புள்ளிகள் |
| **வினாப்பத்திரம் I, வினாப்பத்திரம் II ஆகியவற்றுக்கான மொத்தப் புள்ளிகள்** | | | 200 புள்ளிகள் |
| **∴ இறுதிப் புள்ளி** | | | **100** |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ................................................................................ ✓ $\frac{4}{5}$
................................................................................
................................................................................

(ii) ................................................................................ ✓ $\frac{3}{5}$
................................................................................
................................................................................

(iii) ................................................................................ ✓ $\frac{3}{5}$
................................................................................
................................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

o o o

NEW
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

08.08.2019 / 0830 - 1030

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

32 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**
- ※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
- ※ மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணை** தெளிவாக எழுதுக.
- ※ **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ※ **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ※ ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் உரித்தாகும்.

சுட்டெண் : ................................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| வினாத்தாள் I | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

| | கையொப்பம் | குறியீட்டு இல. |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |

**1.** வணிகத்தின் பரிணாம வளர்ச்சியின் நான்கு படிநிலைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

A - கைத்தொழில் புரட்சி B - பணப் பயன்பாடு
C - பண்டமாற்று முறைமை D - தகவல் யுகம்

மேற்குறிப்பிட்ட வணிகத்தின் பரிணாம வளர்ச்சிப் படிநிலைகள் சரியான ஒழுங்குமுறைப்படி அமைந்த தெரிவு யாது?

(1) A, C, D, B (2) B, A, C, D (3) B, D, A, C (4) C, A, B, D (5) C, B, A, D (……)

**2.** சமூக கலாசாரச் சூழலுக்கு உரித்தான அடிப்படை அம்சங்களைச் சரியாக உள்ளடக்கியுள்ள தெரிவு யாது?

(1) நம்பிக்கைகள், விழுமியங்கள், தொழில்நுட்பம், நியமங்கள்
(2) விழுமியங்கள், நிறுவனங்கள், வயதுக்கட்டமைப்புகள், பாரம்பரியங்கள்
(3) பழக்கவழக்கங்கள், விழுமியங்கள், நிறுவனக் கட்டமைப்பு, பாரம்பரியங்கள்
(4) நம்பிக்கைகள், விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், ஒழுங்குவிதிகள்
(5) நம்பிக்கைகள், விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள் (……)

**3.** பின்வரும் அட்டவணையில் பேரினச்சூழல் கூறுகளும் அவற்றோடு தொடர்புடைய சில நிகழ்வுகளும் தரப்பட்டுள்ளன.

| கூறுகள் | நிகழ்வுகள் |
|---|---|
| (i) பொருளாதாரம் | A - காலநிலையில் ஏற்படும் மாற்றங்கள் |
| (ii) இயற்கை | B - புதிய ஊழியச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல் |
| (iii) தொழில்நுட்பவியல் | C - புதிய உற்பத்தி முறைமையொன்றின் கண்டுபிடிப்பு |
| (iv) சட்டம் | D - வெளிநாட்டு நாணயமாற்றுவீதம் மாற்றமடைதல் |

மேற்குறித்தவற்றுள் கூறுகளின் தொடரொழுங்கிற்கமைவாக நிகழ்வுகள் சரியாகப் பொருந்தும் தெரிவு யாது?

(1) A, C, B, D (2) B, D, C, A (3) C, A, B, D (4) C, D, B, A (5) D, A, C, B (……)

**4.** நிலைபேறான அபிவிருத்தியுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் சில பின்வருமாறு:

A - தொழில்நுட்பவியல் அபிவிருத்தி B - ஊழியர்களின் நலன்நோம்புகை
C - சூழலுக்குகந்த பொருட்களின் கொள்வனவு D - புத்தாக்கத்தின் அறிமுகம்
E - மானிடப் பல்வகைமைக்கு மதிப்பளித்தல் F - இடர் முகாமைத்துவம்

மேற்குறித்தவற்றுள் வணிகங்களின் பொருளாதார நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?

(1) A, B, C, E (2) A, B, D, F (3) B, C, D, E (4) B, D, E, F (5) C, D, E, F (……)

**5.** பின்வருவன இலங்கையில் காணப்படும் சில வரி வகைகளாகும்.

A - கம்பனி வரி
B - தேச நிர்மாண வரி
C - பெறுமதி சேர்க்கப்பட்ட வரி
D - சுங்க வரி
E - கலால் வரி
F - மூலதன இலாபத்தின் மீதான வரி

மேற்குறித்தவற்றுள் நேர்வரி வகைகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தெரிவு யாது?

(1) A, B, C (2) A, B, F (3) B, E, F (4) C, D, E (5) D, E, F (……)

**6.** குறித்தவொரு பொருளின் காலாவதியாகும் திகதி குறிப்பிடப்படாதிருப்பதன் மூலம் மீறப்படும் நுகர்வோர் உரிமை யாது?

(1) அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குள்ள உரிமை
(2) தெரிவு செய்வதற்கான உரிமை
(3) தகவல் அறிந்துகொள்வதற்கான உரிமை
(4) நுகர்வோர் கல்விக்கான உரிமை
(5) பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை (……)

**7.** பின்வரும் அட்டவணையில் கம்பனிகளின் வகைகளும் அவற்றின் சில குணாம்சங்களும் தரப்பட்டுள்ளன.

| கம்பனிகளின் வகைகள் | குணாம்சங்கள் |
|---|---|
| (i) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள் | A - பகிரங்கமாக பங்குகளையும் கடன் பத்திரங்களையும் வழங்கக்கூடியதாயிருத்தல் |
| (ii) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள் | B - இலங்கையில் பதிவுசெய்யப்பட்டு கடல்கடந்து மாத்திரம் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுதல் |
| (iii) உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் | C - பங்குதாரர்களின் பொறுப்புக்கள் வரையறுக்கப்படாமை |
| (iv) வரையறுக்கப்படாத கம்பனிகள் | D - இலாபம் பகிர்ந்தளிக்கப்படாமை |
| (v) கரைகடந்த கம்பனிகள் | E - பகிரங்கமாக பங்குகளையும் கடன்பத்திரங்களையும் வழங்க முடியாமை |

மேற்குறித்த கம்பனிகளின் வகைகளுக்கமைவாக அவற்றின் குணாம்சங்கள் சரியாகப் பொருந்தும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?

(1) C, A, D, E, B (2) C, D, A, B, E (3) D, E, B, C, A (4) E, A, D, C, B (5) E, C, D, A, B (……)

**8.** பின்வருவன வணிகங்களுக்குரிய சில குணாம்சங்கள் ஆகும்.

A - குறைந்தளவான சட்ட நடைமுறைகளின் தேவைப்பாடு
B - தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்
C - வரையறுக்கப்படாத பொறுப்புகள்
D - பரஸ்பர இணக்கப்பாடு
E - வணிகத்தின் பெயரில் வரி செலுத்துதல்

மேற்குறித்தவற்றுள் பங்குடைமையொன்றின் குணாம்சங்களை மாத்திரம் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, E (2) A, C, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E (……)

**9.** பின்வரும் அட்டவணையானது வணிகங்களின் இணைப்பு உபாயங்களையும் அவற்றுடன் தொடர்புடைய விபரக்குறிப்புகளையும் காட்டுகிறது.

| இணைப்பு உபாயங்கள் | விபரக்குறிப்புகள் |
|---|---|
| (i) கிடையான இணைப்பு | A - வேறொரு கைத்தொழிலின் நிறுவனங்களுடன் இணைதல் |
| (ii) நிலைக்குத்து பின்நோக்கிய இணைப்பு | B - ஒத்த கைத்தொழிலின் நிறுவனங்களுடன் இணைதல் |
| (iii) முரண்பாடான இணைப்பு | C - முன்னர் விநியோகத்தர்களாகச் செயற்பட்ட நிறுவனங்களுடன் இணைதல் |
| (iv) நிலைக்குத்து முன்நோக்கிய இணைப்பு | D - முன்னர் வழங்குனர்களாகச் செயற்பட்ட நிறுவனங்களுடன் இணைதல் |

மேற்குறித்த இணைப்பு உபாயங்களின் தொடரொழுங்கிற்கேற்ப உரிய விபரக்குறிப்புகள் சரியாகப் பொருந்தும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?

(1) A, C, B, D (2) B, D, A, C (3) C, A, B, D (4) C, B, A, D (5) D, B, C, A (……)

**10.** பின்வருவனவற்றுள் உள்ளக முயற்சியாண்மையின் குணாம்சம் யாது?

(1) நிறுவனங்களின் பதவிநிலைகளுக்கு அதிக ஆக்கத்திறனைக் கொண்ட நபர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்
(2) நிறுவனங்களில் பணியாற்றும் ஆக்கத்திறனுடைய நபர்களால் உற்பத்தியில் புத்தாக்க முறைகள் அறிமுகம் செய்யப்படுதல்
(3) நிறுவனத்தால் மானிடத் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யக்கூடிய உற்பத்திகள் வழங்கப்படுதல்
(4) சூழல், சமூகப் பிரச்சினைகளைக் கவனத்திற்கொண்டு சூழல்மீது நேர்ப்பாங்கான தாக்கத்தை ஏற்படுத்துதல்
(5) மானுட நேயம்மிக்க உலகினை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல் (……)

**11.** நபர் ஒருவரிடம் காணப்படும் குணாம்சங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - பிரச்சினைகள் காரணமாக தைரியமிழத்தல்
B - பாரம்பரிய முறைகளை நடைமுறைப்படுத்த விரும்புதல்
C - இடர்களை எதிர்கொள்ள விரும்புதல்
D - நிலையான சூழலொன்றில் பணிபுரிய விரும்புதல்
E - சவால்களுக்கு முகம்கொடுக்க விரும்புதல்

மேற்குறித்தவற்றுள் முயற்சியாளர் ஒருவருக்கு உரித்தான குணாம்சங்களை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?

(1) A யும் E யும் (2) B யும் C யும் (3) C யும் D யும்
(4) C யும் E யும் (5) D யும் E யும் (......

**12.** அலகுப் பொறுப்பாட்சிகளில் முதலிடுவதன் மூலமாக முதலீட்டாளருக்குக் கிடைக்கும் அனுகூலமாவது,

(1) முதலீட்டின் மீதான அதிக வருவாய்
(2) அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவத்தில் பங்குபற்றக்கூடிய தன்மை
(3) உபகாரப் பங்குகளைப் பெறக்கூடிய உரித்துரிமை
(4) முதலிடப்பட்ட பணத்தை எவ்வித தண்டப்பணமும் இன்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீளப்பெறக்கூடிய தன்மை
(5) முதலீட்டு வருவாய்க்கெதிரான வருமானவரியைச் செலுத்த வேண்டியதில்லை. (......

**13.** காசோலை குறுக்குக் கோடிடலுடன் தொடர்புடைய சரியான கூற்று யாது?

(1) குறுக்குக் கோடிடப்படாத காசோலையில் பெறுநர் குறுக்குக் கோடிட முடியும்.
(2) பெறுநரினால், தமது கையொப்பத்தினை இட்டு காசோலையிலுள்ள குறுக்குக் கோடிடலை இரத்துச் செய்ய முடியும்.
(3) குறுக்குக் கோடிடப்பட்ட சகல காசோலைகளையும் புறக்குறிப்பிடுவதனூடாக வேறொருவருக்குச் சாட்டுதல் செய்யமுடியும்.
(4) குறுக்குக் கோடிடப்பட்ட சகல காசோலைகளையும் வங்கிக் கருமபீடங்களில் சமர்ப்பித்து காசாக்கிக் கொள்ள முடியும்.
(5) பணக் காசோலைகளைக் (cash cheque) குறுக்குக் கோடிட முடியாது. (......)

**14.** மதுரா A, B எனும் காப்புறுதிக் கம்பனிகளில் முறையே ரூபா 300 000, ரூபா 400 000 ஆகிய பெறுமதிகளில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்கள் இரண்டினைப் பெற்றுக்கொண்டு காப்புறுதித் தவணைப் பணத்தை முறையாகச் செலுத்தியுள்ளார். காப்பீட்டுக் காலத்தினுள் மதுரா மரணமடைவாராயின், கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகை

(1) ரூபா 300 000 (2) ரூபா 350 000 (3) ரூபா 400 000
(4) ரூபா 700 000 (5) இழப்பீட்டினைக் கோருவதற்கு உரித்தில்லை (......)

**15.** முகாமையாளர் ஒருவர், "வணிகத்திற்கான சாதாரண இலாபத்தினை உழைக்கின்ற அதேவேளையில் நிறுவனத்திற்கு அருகாமையில் வசிப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதும் தன்னுடைய பொறுப்பாகும்" எனக் குறிப்பிடுகின்றார். இக் கூற்றின்படி மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டப்படும் நிறுவனத்தின் பொறுப்புக்கூறத்தக்க தரப்பினர்

(1) சமூகமும் வாடிக்கையாளர்களும் ஆவர். (2) உரிமையாளர்களும் ஊழியர்களும் ஆவர்.
(3) உரிமையாளர்களும் சமூகமும் ஆகும். (4) உரிமையாளர்களும் வாடிக்கையாளர்களும் ஆவர்.
(5) உரிமையாளர்களும் அரசாங்கமும் ஆகும். (......)

**16.** போக்குவரத்தின் அடிப்படை அம்சங்களைச் சரியாக உள்ளடக்கியுள்ள தெரிவு யாது?

(1) ஊடகம், வலு, வழி, தரிப்பிடம் (2) ஊடகம், வலு, கிரயம், வேகம்
(3) ஊடகம், தரிப்பிடம், கிரயம், வேகம் (4) ஊடகம், வலு, வழி, வேகம்
(5) கொள்ளளவு, வழி, தரிப்பிடம், வலு (......)

**17.** 'சிறப்பு அங்காடி' என்பதனை மிகச்சரியாக வரையறுக்கின்ற கூற்று யாது?

(1) சுயசேவை அடிப்படையில் அத்தியாவசிய, வசதிப்பொருட்களின் சில்லறை விற்பனையில் ஈடுபடும் ஒரு வர்த்தக நிலையமாகும்.
(2) தனியொரு உற்பத்தியாளரின் பொருட்களை விநியோகம் செய்வதற்காக நாடு முழுவதும் கிளைகளைக் கொண்டதொரு வர்த்தக நிலையமாகும்.
(3) தனியொரு உற்பத்தியாளரின் பொருட்களை மாத்திரம் விற்பனை செய்வதற்கு இணங்கியுள்ளதொரு வர்த்தக நிலையமாகும்.
(4) ஒரே கட்டடத்தில் ஒவ்வொரு வகைப் பொருளுக்குமென வெவ்வேறு பகுதிகளைப் பராமரிக்கும் ஒரு வர்த்தக நிலையமாகும்.
(5) பெருந்தொகையான பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்து அவற்றின் மொத்த விற்பனையில் ஈடுபடும் ஒரு வர்த்தக நிலையமாகும். (......)

**18.** பின்வரும் அட்டவணை சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் சில ஆவணங்களின் வகைகளையும் அவற்றுடன் தொடர்புடைய விபரக்குறிப்புகளையும் காட்டுகிறது.

| ஆவணத்தின் வகை | விபரக்குறிப்பு |
|---|---|
| (i) சுங்கக் குறிப்பு | A - பொருட்கள் கப்பலுக்குப் பொறுப்பேற்கப்பட்டமைக்காக வழங்கப்படுவது |
| (ii) பட்டியல் | B - ஏற்றுமதிப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்ட நாட்டின் பெயரை உறுதிப்படுத்துதல் |
| (iii) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ் | C - விலை, தொகை, மொத்தப்பெறுமதி, ஏற்றுமதியாளரின் பெயர் ஆகிய விபரங்கள் |
| (iv) சுமைச்சீட்டு (B/L) | D - ஏற்றுமதி அல்லது இறக்குமதிப் பொருட்கள் தொடர்பாக முகவரால் தயாரிக்கப்பட்ட கூற்று |

மேற்குறித்த ஆவண வகைகளின் தொடரொழுங்கிற்கேற்ப சரியாகப் பொருந்துமாறு விபரக்குறிப்புகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?

(1) A, C, B, D (2) B, C, A, D (3) B, D, C, A (4) D, B, C, A (5) D, C, B, A (……)

**19.** முகாமையாளரொருவரின் பணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - ஒருங்கிணைத்தல் B - தொடர்பாடல்
C - தந்திரோபாயங்களைத் திட்டமிடல் D - செயற்படுத்துதல்
E - கட்டுப்படுத்துதல் F - கொள்கை அபிவிருத்தி

மேற்குறித்தவற்றுள் மேல்மட்ட முகாமைத்துவத்தின் முக்கிய செயற்பாடுகளை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?

(1) A யும் D யும் (2) B யும் E யும் (3) C யும் F உம்
(4) D யும் E யும் (5) E யும் F உம் (……)

**20.** வணிகமொன்றின் நிதிமூலங்களின் வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - வணிகப் பத்திரம் B - வங்கிக் கடன்கள்
C - நிலையான சொத்துக்களின் விற்பனை D - தொகுதிகடன் பத்திரங்கள் வழங்கல்
E - தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் F - வியாபாரக் கடன்கள்
G - நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் H - இருப்புக்களின் விற்பனை

மேற்குறித்தவற்றுள் உள்ளக நேர் நிதி மூலங்களை மாத்திரம் கொண்டுள்ள தெரிவு யாது?

(1) A, C, D, G (2) A, C, E, G (3) B, D, F, H (4) C, F, G, H (5) C, E, G, H (……)

**21.** XYZ கம்பனியின் நிலையான செலவு ரூபா 60 000 ஆகும். பொருள் A இன் ஓர் அலகு உற்பத்திக்கான மாறும்செலவு ரூபா 1.00 ஆகும். இப்பொருளின் அலகொன்றின் விற்பனை விலை ரூபா 3.00 எனின் இலாபமாக ரூபா 50 000 இனைப் பெற்றுக்கொள்வதற்காக உற்பத்தி செய்யப்பட வேண்டிய மொத்த அலகுகளின் எண்ணிக்கை யாது?

(1) 20 000 (2) 30 000 (3) 40 000 4) 50 000 (5) 55 000 (……)

**22.** பின்வரும் அட்டவணை சீதா என்பவர் தனது யோகட் உற்பத்தியின் தரத்தினைப் பேணுவதற்காகப் பின்பற்றிய தரக்கட்டுப்பாட்டு நுட்பமுறைகள், செயற்பாடுகள் ஆகியவற்றுள் சிலவற்றைக் காட்டுகின்றது.

| தரக்கட்டுப்பாட்டு நுட்பமுறைகள் | செயற்பாடுகள் |
|---|---|
| (i) தர உறுதி | A - வழக்கமாக உற்பத்தி தொடர்பான பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக ஊழியர் குழுக்களை அமைத்தல் |
| (ii) தரவட்டங்கள் | B - உற்பத்திச் செயன்முறையின் அனைத்து மட்டங்களினதும் தரத்தினை அடிக்கடி மேற்பார்வை செய்தல் |
| (iii) பூச்சிய வழு | C - உற்பத்தியின்போது எப்பொழுதும் சரியான மூலப்பொருட்களைப் பயன்படுத்துதல் |
| (iv) தரநியமம் | D - நிறுவனத்தின் செயன்முறைகள் அனைத்திலும் தரத்தினை உறுதிப்படுத்துதல் |
| (v) மொத்த தர முகாமைத்துவம் | E - எவ்வேளையிலும் உற்பத்தியை 100% தரமுடையதாகப் பேணுவதற்குத் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ளல் |

மேற்குறித்த தரக்கட்டுப்பாட்டு நுட்பமுறைகளின் ஒழுங்கிற்கமைய உரிய செயற்பாடுகளைச் சரியாகக் கொண்டுள்ள தெரிவு யாது?

(1) A, B, E, D, C (2) A, C, B, D, E (3) B, A, E, C, D
(4) B, C, D, E, A (5) E, B, C, D, A (……)

**23.** வணிகரொருவர் தன்னால் இயன்றளவு குறைந்த கிரயத்தில் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றைச் சந்தையில் தாராளமாகக் கிடைப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சியை எவ்வெண்ணக்கரு மிகச்சரியாகப் பிரதிபலிக்கின்றது?

(1) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு (2) சமூகம் சார்ந்த சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
(3) விற்பனை எண்ணக்கரு (4) உற்பத்திப்பொருள் எண்ணக்கரு
(5) உற்பத்தி எண்ணக்கரு (……)

**24.** உற்பத்திப் பொருளொன்றுக்கான நுகர்வோர் பெறுமான படிநிலையுடன் தொடர்புடைய கூறுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - மூல (மைய) நன்மைகள்
B - விருத்திசெய்யப்பட்ட (மேம்படுத்தப்பட்ட) உற்பத்திகள்
C - அடிப்படை உற்பத்திகள்
D - எதிர்பார்க்கும் உற்பத்திகள்
E - சாத்தியம்மிக்க உற்பத்திகள்

மேற்குறித்த வாடிக்கையாளர் பெறுமான படிநிலையினை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் தெரிவு யாது?

(1) A, B, D, C, E (2) A, C, D, B, E (3) B, A, E, C, D
(4) B, E, A, C, D (5) C, A, B, D, E (......)

**25.** வணிக நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்ட மேம்படுத்தல் நடவடிக்கைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - உற்பத்திப் பொருள் தொடர்பான விபரங்களை வழங்குதல்
B - அதிஸ்டலாபச்சீட்டு முறையை அறிமுகப்படுத்துதல்
C - விலையைக் குறைத்தல்
D - புலமைப்பரிசில்களுக்கான அனுசரணை வழங்குதல்
E - உற்பத்திப் பொருள் மாதிரிகளை வழங்குதல்
F - வர்த்தகக் கண்காட்சிகளில் பங்குபற்றல்
G - விலைக்கழிவுகளை அறிமுகப்படுத்துதல்

மேற்குறித்தவற்றுள் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளை மாத்திரம் கொண்டுள்ள தெரிவு யாது?

(1) A, D, E, F (2) B, D, E, F (3) B, C, E, G (4) C, D, F, G (5) C, E, F, G (......)

**26.** ஊழியர் வரவின்மை என்பதனால் கருதப்படுவது, ஊழியர்

(1) வேலைக்குச் சமூகமளிக்காதிருத்தல்
(2) நிறுவனத்திலிருந்து விலகிச்செல்லல்
(3) கடமை விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ளல்
(4) உரித்தான விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ளல்
(5) அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்ளாமை (......)

**27.** 'வேலை மூலமான பயிற்சியளிப்பு' என்பதில் **உள்ளடங்காதது** எது?

(1) பயிலுனர் பயிற்சி (2) வேலைச் சுழற்சி
(3) கட்டுறுப்பயில்வு (Internship) (4) உருவகப்படுத்தல் நடிப்பு
(5) பாத்திரமேற்று நடித்தல் (......)

**28.** ஒழுக்காற்று முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றைத் தெரிவுசெய்க.

(1) ஊழியர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளை இழிவளவாக்குதல்
(2) ஊழியர்களின் தன்னம்பிக்கையை விருத்தி செய்தல்
(3) ஊழியர்களுக்குத் தீர்மானங்களை அறிவித்தல்
(4) மருத்துவக் காப்பீட்டுச் செலவுகளை இழிவளவாக்குதல்
(5) ஊழியர்களின் வேலைப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் (......)

**29.** பின்வரும் அட்டவணையில் தகவல் முறைமைகளின் வகைகளும் அவற்றுக்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

| **தகவல் முறைமைகளின் வகைகள்** | | **உதாரணங்கள்** |
|---|---|---|
| (i) | பரிவர்த்தனை செயலாக்க முறைமை (TPS) | A - எதிர்வுகூறல் அறிக்கைகளை வழங்குதல் |
| (ii) | அலுவலக தன்னியக்க முறைமை (OAS) | B - நாளாந்த இருப்புமட்ட அறிக்கைகளை வழங்குதல் |
| (iii) | முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) | C - மின்னஞ்சல் வசதிகளை வழங்குதல் |
| (iv) | தீர்மான உதவி முறைமை (DSS) | D - சம்பள அறிக்கைகளைத் தயாரித்தல் |
| (v) | நிறைவேற்று உதவி முறைமை (ESS) | E - முதலீட்டு மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குதல் |

மேற்குறித்த தகவல் முறைமை வகைகளின் வரிசைக்கு அமைவாக உதாரணங்கள் சரியாகப் பொருந்தும் தெரிவு யாது?

(1) B, C, E, D, A (2) C, D, E, A, B (3) D, C, B, E, A
(4) D, E, A, B, C (5) E, A, B, C, D (......)

**30.** வணிகத் திட்டம் தொடர்பிலான வழிகாட்டலை வழங்குவதற்காகத் தயாரிக்கப்படும் சுருக்கம்

(1) நிறைவேற்றுச் சுருக்கம் ஆகும். (2) கிரயச் சுருக்கம் ஆகும்.
(3) காசுப்பாய்ச்சல் சுருக்கம் ஆகும். (4) வருமானச் சுருக்கம் ஆகும்.
(5) கடன் தொடர்பான சுருக்கம் ஆகும். (......)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

| විෂය අංකය பாட இலக்கம் | 32 | විෂයය பாடம் | வணிகக் கல்வி |
|---|---|---|---|

ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 4 | 21. | 5 |
| 02. | 5 | 12. | 4 | 22. | 3 |
| 03. | 5 | 13. | 1 | 23. | 5 |
| 04. | 2 | 14. | 4 | 24. | 2 |
| 05. | Open | 15. | 3 | 25. | 3 |
| 06. | 3 | 16. | 1 | 26. | 1 |
| 07. | 4 | 17. | 1 | 27. | 4 / 5 |
| 08. | 2 | 18. | 5 | 28. | 1 |
| 09. | 2 | 19. | 3 | 29. | 3 |
| 10. | 2 | 20. | 5 | 30. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 30 = 60

**31.** (அ) இலாபத்தினை நோக்கமாகக் கொண்ட போதிலும் பதிவுசெய்தல் **அவசியமற்ற** இரண்டு வணிக அமைப்புகளாவன ...................................... , ...................................... ஆகியனவாகும்.

(ஆ) உள்ளக விலையுறுதிப்பாட்டின் ஊடாக அரசாங்கம் ...................................... , ...................................... வீதம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த முடியும்.

**அ. தனிவியாபாரம் / தனியாள் வியாபாரம் / தனியுடமை, பங்குடமை** (ஒழுங்கு அவசியமில்லை 2X1/2 = 2 புள்ளிகள்)

**ஆ. பணவீக்கம், வட்டி** (ஒழுங்கு அவசியமில்லை 2X1/2 = 2 புள்ளிகள்)

**32.** (அ) அங்கீகாரம் பெற்ற வியாபாரியினால் மொத்த ................................ பெறுமதியின் சதவீதமாக அங்கீகாரம் வழங்கும் வியாபாரிக்குச் செலுத்தப்பட வேண்டியது ................................ ஆகும்.

(ஆ) முயற்சியாளரொருவர் பொதுவாக ...................................... நோக்கமாகக் கொண்டு வணிகத்தை ஆரம்பிப்பதுடன், சமூகரீதியான முயற்சியாளரொருவர் ...................................... நோக்கமாகக் கொண்டு வணிகத்தை ஆரம்பிப்பார்.

**அ. விற்பனை / வெளியீடு, இறை / தனியுரிமைக் கட்டணம்** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**ஆ. இலாபம், சமூகநலன் / சமூக சேவை** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**33.** (அ) சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் ................................ செறிவானவையாகக் காணப்படுவதனால் நபர்களுக்கு அதிகளவிலான ................................ வழங்கிட முடியும்.

(ஆ) புறவயமான போக்குவரத்து, வழங்கல் சேவைகளின் அசைவுகளானவை (outbound logistics) ...................................... தொடங்கி ...................................... முடிவடையும்.

**அ. ஊழியர், வேலை** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**ஆ. வழங்குனரில், விற்பனையாளரில்/ உற்பத்தியாளரில், நுகர்வோரில்** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**34.** (அ) சுங்கக் களஞ்சியசாலைகளில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட பின்னர் ஏற்றுமதி செய்யப்படுதல் ............................................ வர்த்தகம் என்பதுடன், இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்களின் பயன்பாட்டின் பின்னர் மீண்டும் அதே நாட்டிற்குத் திருப்பியனுப்புதல் ............................................ ஏற்றுமதியாகும்.

(ஆ) சர்வதேச வர்த்தகத்தின்போது கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக வங்கி ......................... , ............................... கடிதம் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

**அ. இறக்கி ஏற்றல், மீள்** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**ஆ. கட்டளை/ஆணை, நாணய** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**35.** (அ) முகாமைத்துவத்தில் சரியானதைச் செய்தல் ............................................ எனப்படுவதுடன், செய்யவேண்டியதைச் சரியாகச் செய்தல் ........................................ எனப்படும்.

(ஆ) மின்ட்ஸ்பேர்க்கின் வகிபாகப் பகுப்பியலுக்கமைய முகாமையாளர் ஒருவரால் புதிய செயற்றிட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுதல் ................................ வகிபாகத்தின் ................................ உப வகிபாகத்திற்குரியதாகும்.

**அ. பயனுறுதி , வினைத்திறன் (Efficiency / Effectiveness )** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**ஆ. தீர்மானம், முயற்சியாண்மை** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**36.** (அ) தொழில்நுட்பத் திறன்கள் ................................ முகாமையாளர்களுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுவதுடன், ................................ திறன்கள் அனைத்து மட்ட முகாமையாளர்களுக்கும் சமவளவில் முக்கியமானவையாகும்.

(ஆ) ஊழியர்களுக்கிடையே ................................ , ................................ ஆகியவற்றை முறையான விதத்தில் கையளிக்கும் செயன்முறை அதிகாரப்பகிர்வு எனப்படும்.

**அ. முதல்வரிசை / கீழ்மட்ட, மானிட** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**ஆ. பொறுப்பு, அதிகாரம்** (ஒழுங்கு அவசியமில்லை 2X1/2 = 2 புள்ளிகள்)

**37.** (அ) குறிக்கோளை மையப்படுத்திய தலைவர்கள் அதிகமாக ................................ தமது கவனத்தைச் செலுத்துவதுடன், ................................ மையப்படுத்திய தலைவர்கள் ஊழியர்களில் அதிகளவில் அக்கறை செலுத்துவர்.

(ஆ) ஊழிய உள்ளீட்டிற்கும் ................................ இடையிலான தொடர்பானது ................................ உற்பத்தித்திறன் எனப்படும்.

**அ. வெளியீட்டில் / இலக்கில், ஊழியர்களை / தனிநபர்களை** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**ஆ. வெளியீட்டிற்கும், ஊழியர் / ஊழிய** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**38.** (அ) உற்பத்தியாளர் ஒருவர் குறித்தவொரு பண்டக்குறியில் பல பொருட்களை முன்வைத்தல் ................................ பண்டக்குறி எனப்படுவதுடன், குறித்தவொரு வர்த்தகருக்காக உருவாக்கப்படும் பண்டக்குறி ................................ பண்டக்குறி எனப்படும்.

(ஆ) இலக்கை அடைவதற்காக விலையை நிர்ணயிக்கும்போது ................................ அடிப்படையாய் அமையும் அதேவேளை, நடைமுறை விலையின்படி விலையினைத் தீர்மானிப்பதில் ................................ அடிப்படையாய் அமையும்.

**அ. குடும்ப, தனிப்பட்ட** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**ஆ. கிரயம், போட்டி** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**39.** (அ) நீண்டகால நிதியியல் தீர்மானங்களை ................................ கட்டமைப்பு, ................................ தொடர்பிலான தீர்மானங்கள் என வகைப்படுத்தலாம்.

(ஆ) காசுப்பாய்ச்சற் கூற்றில் உள்ளடங்கியுள்ள செயற்பாடுகளை பிரதானமாக ................................ ................................ என வகைப்படுத்தலாம்.

**அ. மூலதனம், பங்குஇலாபம்** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**ஆ. காசு உட்பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல்** (ஒழுங்கு அவசியமில்லை 2X1/2 = 2 புள்ளிகள்)

**நிதி /முதலீடு /செயற்பாடு**

**40.** (அ) உள்ளக ஆட்சேர்ப்பு முறைகளாக ................................ பரிந்துரைகள், ................................ திட்டம் ஆகியவற்றைப் பயன்படுத்த முடியும்.

(ஆ) புதிய ஊழியர்களைச் சமூகமயப்படுத்தும் செய்முறையானது ................................ எனப்படுவதுடன், அவர்களைப் பணியில் நிரந்தரமாக்குதல் வரையான காலப்பகுதி ................................ காலம் எனப்படும்.

**அ. ஊழியர், மரபுரிமை** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**ஆ. திசைமுகப்படுத்தல், தகுதிகாண்காலம்** (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 2 புள்ளிகள்)

**41.** வர்த்தக நடவடிக்கைகளில் இடைநடுவர்களைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** குறிப்பிடுக.

**அனுகூலங்கள்**

- வாடிக்கையாளர்களுக்கு தேவைப்படுகின்றபோது கிடைக்க கூடியவாறு, வேறுபட்டபொருட்களை வேறுபட்ட வேறுபட்ட உற்பத்தியாளர்கள், வழங்குனர்களிடம் இருந்து சேகரித்து வசதியான இடத்தில் வழங்குதல்.
- புதிய பொருட்கள் சேவைகளை இலகுவாக அறிமுகம் செய்தல்.
- தொடர்புடைய தரப்பினரிடம் இருந்து சந்தைப்பற்றிய தகவல்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளல்.
- பரிமாற்று செய்முறை இலகுவாகும்
- போக்குவரத்து வழங்கல் சேவை (அமையவியல்) தொடர்பான உதவிகளை வழங்கல்.
- தரம் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய தன்மை $2x1/2 = 1$ புள்ளி

**பிரதிகூலங்கள்**

- வருமானத்தையும் தொடர்பாடல் கட்டுப்பாடுகளையும் பாதிக்கும்.
- பொருட்களின் விலை அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. $2x1/2 = 1$ புள்ளி
- சந்தையில் அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பான தேவையற்ற பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது.

**42.** இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் குறிக்கோள்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

- நாட்டின் உற்பத்திப் பொருட்கள், சேவைகளின் ஏற்றுமதி பெறுமதியை அதிகரிக்க
- இலங்கை ஏற்றுமதிகளில் நேரான சாதமான பார்வையை (பிரதி விம்பத்தை) ஏற்படுத்தல்
- ஏழு அடையாளப்படுத்தப்பட்ட பொருட்கள் தொடர்பான வளர்ச்சி பற்றிய குறிப்பாக கவனம் செலுத்தல்
- சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் உள்ளடங்கலாக நாடு பூராகவும் உள்ள ஏற்றுமதி பயனாளிகள் மீதான ஒரு பரந்த பார்வை $4x1/2 = 2$புள்ளிகள்

**43.** இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்கள் தோல்வியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணங்கள் **நான்கினைத்** தருக.

- நிதிப்பிரச்சினைகள்
- போட்டியை எதிர்கொள்ள இயலாமை
- நிதிமுகாமைத்துவத்திலுள்ள பலவீனம்
- குறைவான முயற்சியாண்மை திறன்கள்
- பொது முகாமைத்துவ பலவீனம்
- போதுமான உட்கட்டுமான வசதியின்மை
- நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாடு தொடர்பான அறியாமை
- வணிகத் திட்டம் இல்லாமை $4x1/2 = 2$புள்ளிகள்

**44.** இலங்கையிலுள்ள உரிமம் (உத்தரவுப்பத்திரம்) பெற்ற விசேட வங்கிகளுக்கு **நான்கு** உதாரணங்கள் தருக.

1. தேசிய சேமிப்பு வங்கி (NSB)
2. ஸ்ரீலங்கா சேமிப்பு வங்கி (SLSB)
3. பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) (ஆங்கில பதங்களுக்கும் புள்ளி வழங்குக)
4. அரச ஈட்டு முதலீட்டு வங்கி (SMIB)
5. சனச ( SANASA ) அபிவிருத்தி வங்கி
6. வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் (HDFC Bank) $4x1/2 = 2$புள்ளிகள்

**45.** கழிவுப்பொருள் முகாமைத்துவத்தில் 4R இன் பகுதிகள் **நான்கினையும்** குறிப்பிடுக.

- மீள் சுழற்சி ( Recycle )
- மீள்பாவனை (Reuse)
- பாவனை குறைப்பு (Reduce) (ஆங்கில பதங்களுக்கும் புள்ளி வழங்குக)
- மீள் உருவாக்கம் (Replace) $4x1/2 = 2$புள்ளிகள்

**46.** பன்முகப்படுத்தல் காரணமாக நிறுவனமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

- மேல்மட்ட முகாமையினது கடமை குறைப்பு
- தரமான தீர்மானம் எடுக்க முடிதல்
- தீர்மான அமுலாக்கம் இலகு
- கீழ் நிலை பணியாளர்கள் விருத்தியடைதல் / முகாமையாளர்கள்
- ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுத்தலும் திருப்தி அதிகரித்தல்
- தொடர்பாடல் வினைத்திறனை அதிகரித்தல் 4x1/2 = 2புள்ளிகள்

**47.** இருப்புக் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய பின்வரும் சமன்பாட்டிலுள்ள எழுத்துக்களின் மூலமாகக் கருதப்படுவன யாவை?

$$EOQ = \sqrt{\frac{2cd}{h}}$$

1. $EOQ$ : பொருளாதார / சிக்கன கட்டளை கணியம் 1/2 புள்ளி
2. $c$ : அலகுகான கட்டளை கிரயம் 1/2 புள்ளி
3. $d$ : வருடாந்த கேள்வி அலகுகள் / கேள்வி 1/2 புள்ளி
4. $h$ : அலகுக்கான பேணும் கிரயம் 1/2 புள்ளி

**48.** புதிதாக ஊழியர் ஒருவரைத் தெரிவுசெய்யும்போது நிறுவனமொன்று பயன்படுத்தக்கூடிய பின்புலச் சோதனை வகைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. குடும்பப் பின்னணி 1/2 புள்ளி
2. கல்விப் பின்னணி 1/2 புள்ளி
3. தனிநபர் நடத்தை 1/2 புள்ளி
4. நிதிப் பின்னணி 1/2 புள்ளி
5. சமூகப் பின்னணி
6. தொழில் வாண்மை பின்னணி

**49.** தரவுச் செயன்முறைப்படுத்தலுடன் தொடர்புடைய கருமங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. வகைப்படுத்தல் 1/2 புள்ளி
2. தெரிவு செய்தல் 1/2 புள்ளி
3. கணித்தல் 1/2 புள்ளி
4. பொழிப்பாக்கல் 1/2 புள்ளி

**50.** பின்வரும் ஒவ்வொரு குறியீட்டினதும் கருத்தினை எழுதுக.

1.  Bluetooth ஊடலை 1/2 புள்ளி

2. QR Code துரிததுலங்கல் குறியீடு 1/2 புள்ளி

3. 

E mail மின்னஞ்சல் / இலத்திரனியல் தபால் 1/2 புள்ளி

4.  Wifi அருகலை 1/2 புள்ளி

❊ ❊ ❊

## பகுதி II

## வணிகக் கல்வி

**1.** அனுஷா என்பவர் செல்லிடத் தொலைபேசிகளின் சில்லறை விற்பனையில் ஈடுபடுபவரும் நவீன ரகங்களிலான செல்லிடத் தொலைபேசி உறைகளின் (phone cover) வடிவமைப்பாளரும் ஆவார். இவர் வடிவமைப்பு பற்றிய சிறந்த அறிவையும் அனுபவத்தையும் கொண்டிருக்கின்றார். தனது விற்பனையையும் இலாபத்தையும் விருத்தி செய்துகொள்வதற்காக பொதுவாக அவ்வுறைகளுக்குக் குறைந்த விலையினை நிர்ணயம் செய்கின்றார். அவரது செல்லிடத் தொலைபேசி உறைகளின் விற்பனையானது 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 50 000 அலகுகளை எட்டியிருந்ததோடு அவற்றுள் 20 000 அலகுகள் நிகழ்நிலை (online) முறையினூடாக விற்பனை செய்யப்பட்டிருந்தன. அனுஷா தனது வணிகத்தை விரிவுபடுத்துவதற்கான வணிக உபாயங்களை இனங்கண்டு கொள்வதற்காக SWOT பகுப்பாய்வொன்றினை மேற்கொள்கிறார்.

(i) (அ) மேலுள்ள விடய ஆய்வில் உள்ளடங்கியுள்ள **இரண்டு** பிரதான அடிப்படை வணிகச் செயற்பாடுகளை விளக்குக.

சந்தைப்படுத்தல்

- செல்லிடத் தொலைபேசிகளை சந்தைப்படுத்துவதன் ஊடாக மனித தேவை, விருப்பங்களை நிறைவு செய்தல்

வடிவமைத்தல்

- வடிவமைத்தல் மூலம் வளங்களுக்குப் பெறுமதி சேர்த்தல்

குறிப்பிட 2 X 1/2 = 1புள்ளி

விபரிக்க 2 X 1/2 = 1புள்ளி

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வணிகத்தின் பிரதான நோக்கங்கள் **இரண்டும்** யாவை?

- விற்பனையினை உச்சப்படுத்தல் / விநியோகத்தை அதிகரித்தல் 2 X 1 = 2 புள்ளிகள்
- இலாபத்தை உச்சப்படுத்தல் / இலாபத்தை அதிகரித்தல்

(ii) செல்லிடத் தொலைபேசி உறைக்கான உயர்ந்தபட்ச விற்பனைப் புரள்வில் தாக்கம் செலுத்தக்கூடிய காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. வடிவமைப்பு
2. நவீனத்துவம் (நவீனமாதிரி)
3. விலை மட்டம் குறைவடைதல்
4. இலகுவாகக் கிடைக்கப்பெறல் / தொடருறு (Online ) மூலம் பெறமுடிதல்

4 X 1 = 4 புள்ளிகள்

(iii) நிகழ்நிலை வணிகத்தினூடாக அனுஷா பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** விளக்குக.

**அனுகூலம்**

1. அதிக நுகர்வோரை பெறலாம்
2. சந்தைகள் விரிவடைதல்
3. கிரயம் குறைவடைதல்
4. சந்தையில் நுழைதல் இலகுவாக அமையும் / பூகோளமயப் போட்டிக்கு இலகுவாக முகங்கொடுக்கலாம்
5. மேந்தலைக்கிரயம் குறைவு
6. குறைந்த ஊழியர் எண்ணிக்கை
7. 24/7 கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளலாம்
8. காரியாலய இடவசதி அவசியம் இன்மை
9. நேரம் சேமிக்கலாம்

2 X 1 = 2 புள்ளிகள்

**பிரதிகூலம்**

1. இணைய தளங்களை உருவாக்குவதற்கான ஆரம்பச் செலவு அதிகம்
2. தொடருறு வணிகம் தொடர்பில் நுகர்வோருக்கு நம்பிக்கை இன்மை
3. மோசடிகளும் முறைகேடுகளும் நிலவுதல் / பாதுகாப்பு தொடர்பான பிரச்சனை
4. சட்டரீதியான பிரச்சனைகள்
5. கொடுப்பனவு முறைகளில் பிரச்சனைகள் ஏற்படலாம்.
6. தொழில்நுட்ப தடைகள்

2 X 1 = 2 புள்ளிகள்

(iv) (அ) SWOT பகுப்பாய்வினூடாக வணிகமொன்றிற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **நான்கினைத்** தருக.

- பலங்களை அடையாளம் காண
- பலவீனங்களை இழிவு படுத்த
- சந்தர்ப்பங்களை பயன்படுத்த
- அச்சுறுத்தலுக்கு ஏற்றவாறு ஆயத்தமாக

4 X 1/2 = 2 புள்ளிகள்

(ஆ) செல்லிடத் தொலைபேசி உறைக் கைத்தொழிலில் பொதுவாகக் காணப்படும் வாய்ப்புக்கள் **இரண்டினையும்** அச்சுறுத்தல்கள் **இரண்டினையும்** எழுதுக.

**வாய்ப்புக்கள்**

1. தொலைபேசிப்பாவனை அதிகரித்தல்
2. புதிய வடிவமைப்புத் தொடர்பாக நாட்டம் அதிகரித்திருத்தல்
3. செல்லிடத் தொலைபேசி பாதுகாப்புத் தொடர்பாக அதிக அக்கறை செலுத்தல்

2 X 1/2 = 1 புள்ளி

**அச்சுறுத்தல்கள்**

1. புதிய போட்டி நிலமை ஏற்படல்
2. செல்லிடத் தொலைபேசி வடிவங்கள் அடிக்கடி மாற்றமடைதல்
3. செல்லிடத் தொலைபேசி உறை தயாரிப்பதற்கான மூலப்பொருள் விலை அதிகரித்தல்

2 X 1/2 = 1 புள்ளி

(v) அனுஷாவிடம் காணப்படுகின்ற பலங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அவை வணிகத்தின் எதிர்கால விருத்திக்கு எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதனை விளக்குக.

1. ஆக்கத்திறன்
2. வடிவமைப்புத் தொடர்பில் சிறந்த அறிவு
3. வடிவமைப்புத் தொடர்பில் சிறந்த அனுபவம்
4. புதிய தொழில்நுட்பம் உள்வாங்கும் திறன்
5. தந்திரோபாயங்களை அறிந்து கொள்ளல் தொடர்பான இயலுமை

குறிப்பிட 2 X 1/2 = 01 புள்ளி
விபரிக்க 2 X 1/2 = 01 புள்ளி

**2.** (i) முகாமையாளரொருவர், நிறுவனத்தின் நோக்கங்களுக்கும் நிறுவனத்தின் மீது அக்கறையுடையோரின் நோக்கங்களுக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள் முகாமையாளர்களுக்கு சவால்களைத் தோற்றுவிப்பதாகத் தெரிவிக்கின்றார். நிறுவனமொன்றின் நோக்கங்களையும் பங்குதாரர்களின் நோக்கங்களையும் உதாரணமாகக் கொண்டு இக்கூற்றினை விபரிக்குக.

**நிறுவனம் சார்பானது**

இலாபத்தை உழைப்பதையும் மீள் முதலீடு செய்வதையும் நோக்கமாகக் கொண்டது.

**பங்குதாரர் சார்பானது**

பங்குதாரர் தமது பங்கு முதலீட்டிற்கு போதிய இலாபம் தர வேண்டும்மெனக் கருதுதல்
அதிக உரிமைகளையும் சலுகைகளையும் பெறவேண்டும் எனக் கருதுதல்

*மேற்குறிப்பிட் விடயங்கள் முழுமையாக எழுதியிருப்பின் 4 புள்ளிகள்*
*பொருத்தமான விடைக்கேற்ப புள்ளியிடவும்*

(ii) (அ) 'நிலைபேறான அபிவிருத்தி' என்பதனை விளக்குக.

எதிர்கால பரம்பரையினரின் தேவைகளை நிறைவு செய்வதற்கு இருக்கின்ற உரிமையினை புறக்கணிக்காது நிகழ்காலத் தேவைகளை அடைந்து கொள்வதற்கான அபிவிருத்தியே நிலைபேறான அபிவிருத்தி என்பதாகும்.

2 புள்ளிகள்

(ஆ) வணிக நிறுவனமொன்று தமது வாடிக்கையாளர்கள் தொடர்பில் கொண்டிருக்க வேண்டிய சமூகப் பொறுப்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1. நியாயமாக நடந்து கொள்ளல்
2. சேதத்தை இழிவுபடுத்தல்
3. உரிமைகளைப் பாதுகாத்தல்
4. தரமான உற்பத்திகளைப் பெற்றுக் கொடுத்தல்
5. நுகர்வோரின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுதல் / நுகர்வோரின் வாக்குறுதிகளை நிறைவேற்றுதல்

2 X 1 = 2 புள்ளிகள்

(iii) வணிக ஒழுக்க நெறிமுறைகளைப் பின்பற்றுவதனால் வணிக நிறுவனமொன்று பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. வணிகம் தொடர்பான நம்பிக்கை உயர்வடையும்
2. நுகர்வோரைக் கவரவும் தக்கவைத்துக் கொள்ளவும் முடிதல் / விற்பனை அதிகரித்தல்
3. போட்டிகளுக்கு சிறப்பாக முகங்கொடுக்க முடிதல்
4. சிறந்த மனிதவள முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்த முடியும்.
5. கணக்கீட்டு முறை, நிதி மோசடிகள், முறைகேடுகளைத் தவிர்த்துக் கொள்ள முடிதல்
6. ஊழியரை இலகுவாக கவர முடிதல்
7. முதலீட்டாளர்களை உச்ச அளவில் கவர்ந்து கொள்ள முடிதல்

4 X 1 = 4 புள்ளிகள்

(iv) (அ) இலங்கை தரக்கட்டளைகள் நிறுவகத்தினால் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சேவைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. தரநியமங்கள் பெறல்
2. ஆய்வுகூட வசதிகள்
3. தேசிய, சர்வதேச தரச்சான்று பெறல்
4. தரநியமம், தரக்கட்டுப்பாடு தொடர்பாக பயிற்சி வழங்கல்
5. நூலக வசதிகள்
6. முறைமைகளை சான்றுப்படுத்தும் சேவை
7. தகவல் சேவை வழங்குதல்

4 X 1/2 = 2 புள்ளிகள்

(ஆ) இலங்கை மத்திய வங்கியானது நிதிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் கொள்கை வட்டி வீதங்கள் **இரண்டினை** விபரிக்குக.

- நிலையான /துணைநில் வைப்பு வசதி விகிதம் (SDFR): வணிக வங்கிகளும் முதல்நிலை வணிகர்களும் அவர்களின் மேலதிக நிதியினை மத்தியவங்கியில் உள்ள அரச பிணை பத்திரங்களில் முதலீடு செய்யும் போது செலுத்தப்படும் வட்டி வீதம்
- நிலையான/ துணைநில் கடன் வசதி விகிதம் (SLFR): வணிக வங்கிகளும் முதல்நிலை வணிகர்களும் அரச பிணைப்பத்திரங்களைப் பிணையாக வைத்து மத்திய வங்கியில் இருந்து நிதியைப் பெற்றுக்கொள்ளும் போது அறவிடப்படும் வட்டிவீதம்.
- வங்கி வட்டிவீதம் : திரவத்தன்மை பிரச்சனைகளை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களில் வணிக வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியால் இறுதிக் கடன் ஈவோன் என்ற வகையில் வழங்கும் கடனுக்கான வட்டி வீதம்
- சட்டரீதியான ஒதுக்கு வீதம் : வணிகவங்கிகள் தமது வைப்புக்களில் ஒரு குறிப்பிட்ட வீதத்தினை மத்திய வங்கியில் ஒதுக்கிலிடல்

குறிப்பிட 2 X 1/2 = 01 புள்ளி
விபரிக்க 2 X 1/2 = 01 புள்ளி

(v) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் நோக்கங்கள் **நான்கினை** விபரிக்குக.

1. நுகர்வோரின் உயிர், ஆதனங்களுக்கு தீங்கு ஏற்படுத்தக் கூடிய பொருட்களை விற்றல், சேவைகளை வழங்குதல் என்பவற்றிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல்.
2. நியாயமற்ற வியாபார நடைமுறைகளுக்கு எதிராக நுகர்வோரைப் பாதுகாப்பதும் நுகர்வோரின் உரிமைகளுக்கு உரிய மதிப்பை உறுதிப்படுத்தலும்
3. முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் நுகர்வோருக்கு போட்டி விலையில் பொருட்கள் சேவைகளை தேவையான அளவு வழங்குவதற்கு உறுதியளித்தல்
4. நியாயமற்ற வியாபார நடைமுறைகள், மட்டுப்படுத்தப்பட்ட வியாபார நடைமுறைகள் அல்லது வியாபாரிகளால் மேற்கொள்ளப்படுகின்ற வேறு முறைகளிலான நுகர்வோர் சுரண்டல்களுக்கு உட்படுவோருக்கு உதவிகளை வழங்குதல்

4 x 1 = 4 புள்ளிகள்

**3.** (i) வெதுப்பக உற்பத்திகளுக்கான உள்ளீடுகளின் விலை அதிகரிப்பின் காரணமாக வெதுப்பக உரிமையாளரொருவர் பங்குடைமை வியாபாரம் ஒன்றினைத் தாபித்து மேலதிக முதலீட்டினைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தார். இக்குறித்த தீர்மானத்தின் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள் **நான்கினை** விபரிக்குக. (04

1. அதிக மூலதனத்தை திரட்ட முடிதல்
2. பல திறன்களையும் இயலுமைகளையும் ஒன்றிணைக்க முடிதல்
3. பொறுப்புக்கள் பலரிடையே பகிரப்படும்
4. ஒன்றிணைந்த பொறுப்புக் காரணமாக ஏற்படும் ஊக்கமும் வினைதிறனும்
5. நட்டங்கள் ஏற்படுமாக இருந்தால் பல்வேறு நபர்களிடையே பகிர்ந்தளித்தல்

குறிப்பிட 4 X 1/2 = 2 புள்ளிகள்

விளக்க 4 X 1/2 = 2 புள்ளிகள்

(ii) சியாமளா என்பவர் தமது பிரதேசத்தில் தாராளமாகக் கிடைக்கக்கூடிய வாழை நாரிழைகளைக் கொண்டு பெண்களுக்கான கைப்பைகள், தொப்பி, வேறு அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனமொன்றை ரூபா 50 000 முதலிட்டுத் தொடங்கியதுடன், அப்பிரதேசத்தில் வசிக்கும் வேலைவாய்ப்பற்ற பெண்கள் மூவரைத் தெரிவுசெய்து இவ்வுற்பத்திகள் தொடர்பான பயிற்சிகளை வழங்கி நாளொன்றிற்கு ரூபா 800 இனைக் கொடுப்பனவாகச் செலுத்தும் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்திக் கொண்டார். அத்துடன் தனது உற்பத்திகளை உல்லாசப்பயண ஹோட்டல்களில் சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார். இவ்விடய ஆய்வில் காணப்படும் சமூக பொருளாதார நன்மைகளைத் தருக.

1. உள்ளூர் வளப்பயன்பாடு
2. வருமான ஏற்றத்தாழ்வுகளை இழிவுபடுத்தல்.
3. புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கம்
4. புதிய வருமான சந்தர்ப்பங்கள் உருவாகுதல்
5. மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு
6. புதிய சந்தை விருத்தி / அந்நியசெலாவணி சம்பாத்தியம்
7. புதிய பொருட்கள் சேவைகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம்
8. சூழல் நேய உற்பத்தி
9. வியாபார வளர்ச்சியும் அபிவிருத்தியும் ஏற்படல் 4 X 1 = 4 புள்ளிகள்

(iii) பாரிய நிறுவனங்களாவதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்களைக் கருத்திற்கொள்ளாது சில நிறுவனங்கள் சிறு வணிகங்களாகவே நடாத்திச் செல்ல விரும்புகின்றமைக்கான காரணங்கள் **நான்கினை** விபரிக்குக.

1. ஊழியர் தொடர்பான பிரச்சனை குறைவடையும் – மனிதவளத்தைப் பெற்றுக் கொள்ள அதிக கிரயம் ஏற்படாது
2. செலவு குறைவடையும்.
   (உ+ம்: வாடகை, நீர், மின்சார செலவு குறையும்)
3. நெகிழ்வுத்தன்மையானது – மாற்றங்களுக்கு விரைவாக முகங்கொடுக்க முடியுமாக இருத்தல்
4. செயற்பாட்டு நடவடிக்கைகளில் தரத்தைப் பேணமுடியும் / சிறுவணிகத்தில் தரம் தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தக்கூடியதாக இருத்தல்
5. உயர்ந்த இலாபம் பெறக்கூடியதாக இருத்தல் / செலவு குறைவாக இருக்கும் ஃ செலவினை இழிவு படுத்துவதன் ஊடாக இலாபம் கூடுதல்
6. வாடிக்கையாளருடன் நெருங்கிய தொடர்பைப் பேணமுடிதல்
7. தமது அதிகார கையளிப்பினை விரும்பாமை

குறிப்பிட 4 X 1/2 = 2 புள்ளிகள்

விபரிக்க 4 X 1/2 = 2 புள்ளிகள்

(iv) (அ) விரைவுத் துலங்கல் குறியீட்டைப் (Quick Respose Code) பயன்படுத்துவதன் மூலம் வணிகரொருவர் பெற்றுக்கொள்ளத்தக்க அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1. நுகர்வோரிடம் நம்பிக்கை உருவாகும்
2. விற்பனை அளவு அதிகரிப்பதன் மூலம் இலாபம் உயரும் சந்தை வாய்ப்பு அதிகரிக்கும்
3. பொருள் தொடர்பான தகவல் விரைவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.
4. நுகர்வோருக்கு Online மூலம் விபரங்களை Code இன் மூலம் பெற்றுக்கொள்ள முடிவதால் மேம்படுத்தல் செலவு குறைவாக காணப்படும்.
5. விளம்பரப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாக அமையும்
6. கொடுக்கல் வாங்கல்கள் விரைவுபடுத்தப்படும் .

2 X 1 = 2 புள்ளிகள்

(ஆ) இலத்திரனியல் பணப்பையைப் (e-wallet) பயன்படுத்தி செல்லிடத் தொலைபேசியினூடாகக் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக நபரொருவர் பூர்த்தி செய்திருக்க வேண்டிய அடிப்படைத் தேவைப்பாடுகள் **இரண்டினைத்** தருக.

- பிரயோக மென்பொருள் / செயலி பதிவிறக்கம் செய்யவேண்டும் (e-wallet app)
- நபரின் அடிப்படை விபரங்களை பதிவு செய்தல் (பெயர், செல்லிடத் தொலைபேசி இலக்கம், இலத்திரனியல் தபால் முகவரி)
- இரகசியக் குறியீட்டு இலக்கம் பெறல் (PIN)
- கடனட்டை வரைவட்டையை ewallet app உடன் தொடர்பு படுத்தல் அல்லது அட்டைகளை வருடல் (Scan)

2 X 1 = 2 புள்ளிகள்

(v) (அ) அரச திணைக்களங்களின் குணாம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. அமைச்சின் கீழ் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கு உட்படல்
2. நிறுவன தாபனக்கோவை, நிதிப்பிரமாணம் போன்ற அரச கொள்கைகளுக்கு ஏற்ப கருமமாற்ற வேண்டி ஏற்படல்
3. பெரும்பாலும் சேவை வழங்கும் நிறுவனங்களாக இருத்தல்
4. அரசின் வரவு செலவுத் திட்டத்தில் திறைசேரி மூலம் தேவையான நிதியினை ஈட்டிக் கொள்ள முடிதல் / திறைசேரி மூலம் தேவையான நிதி ஈட்டிக் கொள்ளல்
5. சட்டத்தின் முன் தனி மனிதனாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை

4 X 1/2 = 2 புள்ளிகள்

(ஆ) அரச கூட்டுத்தாபனத்தினை அரச திணைக்களத்திலிருந்து வேறுபடுத்தி இனங்காணத்தக்க குணாம்சங்கள் **இரண்டினை** விளக்குக.

1. விசேட அல்லது பொதுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும்
2. சட்டத்தின் முன் தனி மனித அந்தஸ்து காணப்படும்
3. அரசினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்படும்.
4. அரச கடன், பங்கு இலாபம், மீள் முதலீடு, பொதுமக்களின் கடன் மூலம் மூலதனத்திற்கு பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளல்
5. மூலதனத்திற்கு அரச, தனியார் பங்களிப்பு காணப்படும்.

2 X 1 = 2 புள்ளிகள்

**4.** (i) லக்ஷ்மி என்பவர் முறைசார்ந்த, முறைசாராத மூலங்களிலிருந்து நிதியைப் பெற்று தமது பிரதேசத்தின் பால் உற்பத்திகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் நிறுவனமொன்றினை ஆரம்பிக்க எண்ணுகிறார். முறைசாராத நிதிமூலங்களை விட முறைசார்ந்த நிதிமூலங்கள் ஊடாக லக்ஷ்மிக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **நான்கினை** விபரிக்குக.

1. நிலையான வட்டி வீதம் காணப்படும்
2. பிணை தொடர்பில் பாதுகாப்பு கிடைத்தல்
3. நிபந்தனைகள் முறையானதாகவும், நிலையானதாகவும் காணப்படும்.
4. மீள் செலுத்துவதற்கான காலம் நீண்டது
5. வியாபாரத்தை முறையாக் நடாத்த வாய்ப்பாக அமையும்
6. கடன் மூலதனத்தை முதலீடு செய்வது தொடர்பாக கடன் வழங்கிய நிறுவனத்தினால் நெறிப்படுத்தப்படும்.
7. தோல்விக்கான சந்தர்ப்பம் குறைவாக காணப்படும்.
8. ஒப்பீட்டளவில் வட்டி வீதம் குறைவாகக் காணப்படும்.

4 X 1 = 4 புள்ளிகள்

(ii) (அ) 'காவியின் காசோலை' இனை 'கட்டளைக் காசோலை' உடன் ஒப்பிடுக.

| காவி | கட்டளை |
|---|---|
| 1. கொண்டு வருபவருக்கு பணம் வழங்கப்படும் | 1. கட்டளைகளுக்கு மட்டும் பணம் வழங்கப்படும் |
| 2. புறக்குறிப்பிட தேவையில்லை | 2. புறக்குறிப்பிடல் அவசியம் |
| 3. பாதுகாப்பு குறைவு | 3. பாதுகாப்பு அதிகம் |

இரண்டு விடயங்களை ஒப்பிட 2 X 1 = 2 புள்ளிகள்

(ஆ) 'தொழில் வழங்குனர் (ஊழியர்) பொறுப்புக் காப்புறுதி' என்பதனை விபரிக்குக.

ஊழியர் பொறுப்புக் காப்புறுதி : ஊழியர் சேவையில் ஈடுபடும் பொழுது அவர்களுக்கு ஏற்படும் விபத்துக்கள் சார்பாக இழப்பீடு செலுத்துவதற்கு தொழில் வழங்குனரின் பொறுப்பாக இருத்தல் இக் காப்புறுதி ஆகும்.

(தொழிலாளர் சார்பாகவும் எழுதியிருப்பின் புள்ளி வழங்கவும்) 2 புள்ளிகள்

(iii) இலங்கை புகையிரத போக்குவரத்துச் சேவையில் காணப்படும் பலவீனங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அப்பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுகளைப் பரிந்துரைக்குக.

| பலவீனம் | | தீர்வு |
|---|---|---|
| 1. புகையிரதப் பாதைகள் நாடுபூராகவும் பரவலாக காணப்படாமை | – | புகையிரப்பாதைகளை விஸ்தரிக்கும் செயற்திட்டம் |
| 2. பயணம் முடியும் வரையில் இதனைப் பயன்படுத்த முடியாமையினால் ஏனைய போக்குவரத்து பயன்படுத்தப்படல் | – | ஏனைய போக்குவரத்து சேவைகளுடன் தொடர்பு படுத்தும் வகையில் இணைத்தல் |
| 3. தேவையான எந்த நேரத்திலும் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாமை | – | புகையிரத சேவைகளின் / பயண தடவைகளின் எண்ணிக்கைகளை அதிகரித்தல் |
| 4. மின்சார சமிஞ்சை தடைப்படல் புகையிர பாதை பழுதடைவதனால் தாமதம் அடைதல் | – | மின்சார சமிஞ்சைகள் பாதைகள் பராமரிப்பு சேவைகளை முறைமைப்படுத்தல், நவீன தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தல் |
| 5. பொருள் போக்குவரத்தின் போது பொருள் சேதம் அடைதல் | – | ஏற்றியிறக்கும் போது நவீன உபகரணங்களைப் பாவித்தல் |
| 6. பொருள், பயணிகள் போக்குவரத்தின் போது வசதிகள் குறைவு | – | புகையிரதத் தரிப்பிடத்தை நவீனப்படுத்தல் பல்வேறு பொருட்களுக்கும் பொருத்தமான போக்குவரத்து தரிப்பிடங்களை ஏற்படுத்துதல் |

பலவீனங்களைக் குறிப்பிட 4 X 1/2 = 2 புள்ளிகள்

தீர்வுகளைக் குறிப்பிட 4 X 1/2 = 2 புள்ளிகள்

(iv) (அ) வணிக நடவடிக்கைகளில் தொடர்பாடல் முக்கியத்துவம் பெறும் வழிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

- வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களின் போது உரிய தரப்பினர்களிடையே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுதல்.
- உரிமையாளர் ஊழியர் தொடர்பினைப் பேணுதல் / ஊழியர் ஊழியர் தொடர்பினைப் பேணுதல்
- விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- மனித பௌதிக வளங்களை சிறப்பாக முகாமை செய்தல்
- மூலதனத்தைத் திரட்டிக் கொள்வதற்காக
- ஆராய்ச்சி அபிவிருத்திக்காக

2 X 1 = 2புள்ளிகள்

(ஆ) வாய்மொழிமூலத் தொடர்பாடலின்போது செய்தியொன்று சிதைவடைவதற்கான காரணங்கள் **நான்கினைத்** தருக.

1. மொழியினை விளங்கிக் கொள்வதில் உள்ள பிரச்சினை
2. எண்ணங்களைச் சரியாக வழங்குவதில் குறைபாடுகள்
3. தகவல்களை முறையாக விளங்கிக் கொள்ளாமை
4. தகவல் பெறுபவர் அது தொடர்பான கவனக்குறைவுடன் இருத்தல் .
5. கேட்டலின் போது ஏற்படும் தடை
6. தகவல் வழங்குபவர் வேகமாக தகவல்களை வழங்குதல்.
7. ஒரே தடவையில் கூடியளவு தகவல்கள் வெளியிடப்படல்.
8. போதுமான அளவு தகவல்கள் முன்வைக்காமை

4 X 1/2 = 2புள்ளிகள்

(v) (அ) 'ஒப்பீட்டு கிரய அனுகூலம்' என்பதனை விபரிக்குக.

**ஒப்பீட்டு கிரய அனுகூலங்கள்**

நாடொன்று பொருட்களை இறக்குமதி செய்வதுடன் ஒப்பிடும் போது குறைந்த கிரயத்தில் அவற்றை உற்பத்தி செய்யக்கூடியதாக இருப்பின் அவற்றை உற்பத்தி செய்தல் வேண்டும் எனவும், மாறாக அப்பொருட்களை உற்பத்தி செய்வதுடன் ஒப்பிடும்போது குறைந்த கிரயத்தில் அவற்றை இறக்குமதி செய்யக்கூடியதாக இருப்பின் அவற்றை உற்பத்தி செய்யாது இறக்குமதி செய்தல் வேண்டும் என்பதும் ஒப்பீட்டுக்கிரய அனுகூலம் என்பதாகும். பூரண விடைக்கு 2 புள்ளிகள்


(ஆ) 'இலத்திரனியல் கொடுப்பனவு முறைமைகள்' என்பதனால் கருதப்படுவது யாது?

இணைய வலையமைப்பினைப் பயன்படுத்தி பௌதீக பணப்பாவனையின்றி பணத்தினை உடனடியாக செலுத்தக் கூடிய முறைமைகள் இலத்திரனியல் கொடுப்பனவு முறைமைகள் என்பதாகும் உ+ம் : கடனட்டை, வரவட்டை

விபரிக்க 2 புள்ளிகள்

## பகுதி II

**5.** (i) நிறுவனமொன்றின் அமைப்பு வரைபடத்தின் ஒரு பகுதி கீழே காட்டப்பட்டுள்ளது.




(அ) 'நிறுவனக் கட்டமைப்பு' என்பதனால் கருதப்படுவது யாது?

நிறுவனத்தின் பதவிகள், கருமங்கள், அதிகாரங்கள், பொறுப்பு, வகை கூறல் என்பவை பிரிந்து சென்றுள்ள முறை மற்றும் இணைப்பாக்கம் செய்யப்பட்டுள்ள முறை நிறுவனக் கட்டமைப்பு என்பதாகும் 2 புள்ளிகள்

(ஆ) 'கட்டுப்பாட்டு விசாலம்' என்பதனை விளக்குவதுடன், மேலே தரப்பட்டுள்ள அமைப்பு வரைபடத்தைப் பயன்படுத்தி சந்தைப்படுத்தல் முகாமையாளரின் கட்டுப்பாட்டு விசாலத்தின் அளவைக் குறிப்பிடுக.

ஒரு முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கைப்படுத்தும் ஊழியர்களின் எண்ணிக்கை கட்டுப்பாட்டு விசாலமாகும். 1 புள்ளி

விரிந்த விசால அளவு 1 புள்ளி

(ii) (அ) 'சமகால கட்டுப்பாடு', 'பின்னூட்டல் கட்டுப்பாடு' என்பவற்றால் கருதப்படுவன யாவை என்பதனை விளக்குக.

**சமகாலக் கட்டுப்பாடு / நடைமுறைக் கட்டுப்பாடு:**

நிறுவனம் ஒன்றில் வேலைச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது வேறுபாடுகளை ( மாறிகளை ) இனங்கண்டு அவை மேலும் பரவிச் செல்லாத வகையில் தடுப்பதற்கு எடுக்கும் செயல்முறை ஆகும்.

**பின்னூட்டல் கட்டுப்பாடு:** 1 புள்ளி

நிறுவனம் ஒன்றின் எதிர்பார்க்கப்பட்ட விளைவிற்கும் உண்மை விளைவிற்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுமாயின் அவற்றை செம்மையாக்கும் செயன்முறையாகும். 1 புள்ளி

(ஆ) வணிக நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆகியன முக்கியமானதாய் அமைவதற்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

- உற்பத்தியின் தரத்தை உயர்த்தல்
- உற்பத்தி செயன்முறையின் வினைத்திறனை உயர்த்தல்
- உற்பத்திக் கிரயத்தை இழிவு படுத்தல்
- புதிய பொருட்கள் சேவைகளை அறிமுகம் செய்தல்
- விரயங்களை இழிவுபடுத்தலும் பூச்சியமாக்குதலும்
- சிறந்த முறையில் நுகர்வோரைத் திருப்திப்படுத்தல்
- புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள்
- போட்டியினை எதிர்கொள்ள சாத்தியமாதல்

4 X 1/2 = 2 புள்ளிகள்

(iii) XY கம்பனி தொடர்பிலான சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | மதிப்பிடப்பட்டது (ரூபா) | உண்மையானது (ரூபா) |
|---|---|---|
| விற்பனை வருமானம் | 3 000 | 2 750 |
| விற்பனைக் கிரயம் | 2 100 | 12 700 |

(அ) விற்பனை வருமான விலகலையும் விற்பனைக்கிரய மாறியையும் கணிக்குக.

**விற்பனை வருமான விலகல் =**

ரூ 3,000 - ரூ2,750 = ரூ250

**விற்பனை கிரயமாறி =**

ரூ 2,100 - ரூ12,700 =

ரூ 10,600 அல்லது ரூ –10,600

2 X 1 = 2 புள்ளிகள்

(ஆ) விற்பனை வருமானம் மாற்றமடைவதற்கான காரணங்கள் **இரண்டினை** விளக்குக.

**விற்பனைத் தொகை அதிகரித்தல் / குறைதல்**
**விற்பனை விலை குறைவாகவோ / கூடுதலாகவோ இருத்தல்**

2 X 1 = 2 புள்ளிகள்

(iv) "மோட்டார் வாகன உற்பத்தியில் அதிகளவில் பயன்படுத்தப்படுவது பாய்ச்சல் உற்பத்தி முறையாகும்." இம்முறையானது மோட்டார் வாகன உற்பத்தியில் பயன்படுத்தப்படுவதனால் கிடைக்கப்பெறும் அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றைச் சுருக்கமாக விளக்குக.

- பேரளவு உற்பத்தியினால் பொருளாதார சிக்கனம் ஏற்பட்டு அலகு கிரயம் குறைவடைதல்
- குறைவான ஊழியர்களால் உற்பத்தி பாய்ச்சலைக் கட்டுப்படுத்த முடியுமாக இருப்பதால் ஊழியர்களைக் குறைக்க முடியும்.
- முழுமையான சந்தை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுதலால் சந்தை விரிவடையும்
- நவீன தொழினுட்ப வசதிகளை பயன்படுத்த முடியுமாக இருத்தலால் உற்பத்தி வினைத்திறன் அதிகரிக்கும்
- பேரளவு உற்பத்தி காரணமாக தனியுரிமை ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது
- போட்டிக்கு இலகுவாக முகங்கொடுக்கலாம்


குறிப்பிட 4 X 1/2 = 2 புள்ளிகள்
விளக்க 4 X 1/2 = 2 புள்ளிகள்

(v) 'செயன்முறைத் தளவமைப்பு', 'உற்பத்திப்பொருள் தளவமைப்பு' ஆகியவற்றை ஒப்பிடுக.

| செயன்முறை தளவமைப்பு | உற்பத்திப்பொருள் தளவமைப்பு |
|---|---|
| 1. உற்பத்தி செயன்முறையில் படிமுறையொன்றை பூர்த்தி செய்வதற்கு தேவையான சகலவற்றையும் ஒரே இடத்தில் இடம்பெறும். | 1.முழுமையான உற்பத்திச் செயன்முறையானது ஓர் வேலை நிலையத்தில் இருந்து அடுத்த வேலை நிலையத்திற்கு நேர்வரிசையில் முறையாக பாய்ந்து செல்லல் |
| 2. உற்பத்தி பகுதியில் பொருள் முன்பின் இடத்திற்கு இடம்மாறும். | 2. அவ்வாறு இடம்பெறாது |
| 3. ஒப்பீட்டளவில் குறைந்த மூலதனம் ஈடுபடுத்தப்படும் | 3. அதிக மூலதனம் ஈடுபடுத்தப்படும். |
| 4. ஒரே இயந்திரம் பல்வேறு வடிவிலான உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படும். | 4. ஒரே இயந்திரம் உற்பத்திக்கு பயன்படுத்தப்படாது |
| 5.ஒப்பீட்டளவில் நேரம் அதிகம் | 5. நேரம் குறைவு |
| 6. ஒப்பீட்டளவில் இருப்பு அதிகமாக பேண வேண்டும். | 6. இருப்பு குறைவாகப் பேணவேண்டும். |
| 7. வேலை அதிகம் | 7. வேலை குறைவு |

ஒப்பிட 4X1=4 புள்ளிகள்

**6.** (i) XYZ கம்பனியின் தொலைக்காட்சிப் பெட்டிகளின் இருப்பு மட்டங்கள் தொடர்பான வரைபடமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.




பின்வருவனவற்றைக் கணிக்குக.

(அ) சுற்றோட்டக் காலம் (ஆ) மறுகட்டளைத் தொகை

(இ) பாதுகாப்புக் கையிருப்பு (ஈ) முதன்மைக் காலம்

**அ. சுற்றோட்டக்காலம் – 4 வாரங்கள்** 1 புள்ளி

**ஆ. மறுகட்டளை தொகை 4000 அலகுகள்** 1 புள்ளி

**இ. பாதுகாப்பு இருப்பு 2000 அலகுகள்** 1 புள்ளி

**ஈ. முதன்மைக் காலம் 2 வாரங்கள்** 1 புள்ளி

(ii) பொருட்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்தக்கூடிய வழிமுறைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

- **உயர் தரத்துடன் கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்துதல்**
- **விரயங்கள், சேதமடைதலைக் குறைத்துக் கொள்ளல்**
- **உத்தம இருப்பினைப் பேணல்**
- **பொருள்களை மீண்டும் பயன்படுத்தலும் மீள் சுழற்சிக்குட்படுத்தலும்**
- **உயர்ந்த தொழில் நுட்பம் பயன்படுத்தல்**

4 x 1 = 4 புள்ளி

(iii) (அ) 'சந்தைத் துண்டமாக்கல்' என்றால் என்ன?

**முரண்பட்ட பண்புகளைக் கொண்ட முழுமையான சந்தையினை ஒத்த பண்புகளுடன் கூடிய குழுக்களாக வகைப்படுத்தி வேறுபடுத்துவது சந்தைத்துண்டமாக்கல் எனப்படும்.**

பூரண விடைக்கு 2 புள்ளிகள்

(ஆ) சந்தைத் துண்டமாக்கல் விற்பனையை அதிகரிப்பதற்குத் துணைபுரியும் விதத்தினைச் சுருக்கமாக விளக்குக.

**முழுமையான சந்தை துண்டத்திலிருந்து விசேட வாடிக்கையாளரை இனம்கண்டு அவர்களின் தேவை விருப்பம் பூர்த்தி செய்வதனால் நுகர்வோரைக் கவரலாம். இதன் காரணமாக வணிகர்கள் காணப்படும் வளங்களை வினைத்திறனாகவும் தந்திரோபாயத்துடன் சந்தைப்படுத்தல் தீர்மானங்களை எடுக்க முடிதல். மொத்த நுகர்வோரில் சந்தை துண்டம் சிறிதாயினும் நுகர்வோருக்கு அதிகமான தேவை இருப்பதனால் விற்பனை அதிகரிக்கும்.**

பூரண விடைக்கு 2 புள்ளிகள்

(iv) 'நுகர்வோர் பெறுமதி', 'நுகர்வோர் திருப்தி' ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பை விபரிக்குக.

நுகர்வுத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உற்பத்தியாளருக்குக் காணப்படும் ஆற்றல் தொடர்பாக நுகர்வோரினால் மேற்கொள்ளப்படும் முழுமையான மதிப்பீடே நுகர்வோர் பெறுமதி என்பதாகும். இதனுடன் தரம், சேவை, விலை என்பனவும் கருத்தில் கொள்ளப்படும். 1 புள்ளி

நுகர்வோர் எதிர்பார்க்கும் முறையில் உற்பத்திப் பொருள் ஒன்றை உருவாக்குதல் மூலம் நுகர்வோர் பெற்றுக்கொள்கின்ற மகிழ்ச்சியே திருப்தி என்பதாகும். 1 புள்ளி

இதன்படி நுகர்வோர் எதிர்பார்க்கும் பெறுமதி உற்பத்திப் பொருளில் கிடைப்பின் திருப்தியும், கிடைக்காதுவிடின் அதிருப்தியும் அடைதலே இதற்கிடையிலான தொடர்பு ஆகும். 2 புள்ளிகள்

(v) (அ) 'உற்பத்திப் பொருள் வாழ்க்கைச் சுற்றோட்டம்' (PLC) என்பதனால் கருதப்படுவது யாது?

பொருள் ஒன்றினை உற்பத்தி செய்வதற்கான எண்ணம் உற்பத்தியாளரது மனதில் உருவாவதிலிருந்து அப்பொருள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு அறிமுகமாகி உயர்ந்த கேள்வியினைப் பெற்று பின் பல்வேறு காரணங்களினால் கேள்வி சரிவுற்று நிறைவில் சந்தையிலிருந்து வெளியேறல்வரை பல்வேறு கட்டங்களைக் கொண்டதே உற்பத்திப் பொருள் வாழ்க்கைச் சுற்றோட்டம் என்பதாகும். 2 புள்ளிகள்

(வரைபடமாக தரப்பட்டிருப்பின் 1 புள்ளி)

(ஆ) உற்பத்தியாளர் ஒருவர் உற்பத்திப் பொருளொன்றின் வாழ்க்கைச் சுற்றோட்டத்தை விளங்கிக் கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய **இரண்டு** அனுகூலங்களை எழுதுக.

- உற்பத்தியாளருக்கு உற்பத்தியொன்று வாழ்க்கைச் சுற்றோட்டத்தில் பல்வேறு கட்டங்களின் போது, ஏற்படும் சந்தைப்படுத்தல் சவால்களுக்கு முகங்கொடுக்கத் தயாராகுதல் நோக்கங்களையும் உபாய வழிமுறைகளையும் அறிந்து கொள்வதற்கு
- ஒவ்வொரு கட்டத்திலும் எடுக்க வேண்டிய தீர்மானங்களை உடனடியாக எடுத்தல்.
- போட்டியின் போதான நன்மையை பெற்றுக் கொள்ள
- உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் எடுக்க வேண்டிய சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை அறிந்து கொள்ள முடிதல். 2 x 1=2 புள்ளிகள்
- விற்பனையை எதிர்வுகூற முடியும்
- பொருள் பல்வகைப்படுத்தல்

**7.** (i) வணிக நிறுவனமொன்றின் வெளியக நிதி மூலங்கள் **இரண்டினையும்** அவற்றிற்கான வரையறைகள் **இரண்டினையும்** விளக்குக.

**வெளியக நிதி மூலங்கள்**

- பங்கு வழங்கல்
- வங்கிக்கடன்
- குத்தகை
- வங்கி மேலதிக பற்று
- அடகு வைத்தல்
- வாடகைக் கொள்வனவு
- தொகுதிக் கடன்
- வணிகப் பத்திரம்
- தனிப்பட்ட கடன்கள்

2x1= 2 புள்ளிகள்

**வரையறைகள்**

- நிதிப்பெற்றுக் கொள்வதில் செலவு
- நிதிப்பெற்றுக் கொள்வதில் சிரமம்
- பிணை அவசியம்
- வணிகத்தின் பொறுப்பு அதிகரிக்கும்

2 x 1 = 2 புள்ளி கள்

(ii) (அ) வணிகத் தீர்மானங்களில் திரவ விகிதங்களின் முக்கியத்துவத்தை விபரிக்குக.

1. குறுங்கால நிதிக்கடப்பாடுகளுக்கு / பொறுப்புக்களுக்கு முகங்கொடுப்பதற்கான இயலுமையினை வெளிக்காட்டும்
2. தொழிற்படுநிதியினை எதிர்வு கூற முடியும்
3. தேவைப்படும் தொழிற்படு மூலதன அளவினை இனம் காண முடியும்

2 x 1 = 2 புள்ளி கள்

(ஆ) கம்பனியொன்றின் பங்குகளின் விலை அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. பங்குகளின் கேள்வியும் நிரம்பலும்
2. கம்பனியின் நன்மதிப்பு
3. கம்பனி வழங்கும் பங்கிலாப கொள்கை
4. நாட்டின் பொருளாதார காரணிகள்
5. அரசியல் காரணிகள்
6. முதலீட்டாளர்களின் நடவடிக்கை
7. முகாமையாளரின் இயலுமை

4 x 1/2 = 2 புள்ளி கள்

(iii) (அ) தரவு, தகவல் ஆகியவற்றை ஒப்பிடுக.

| தரவுகள் | தகவல்கள் |
|---|---|
| தரவு ஒழுங்கமைக்கும் செயற்பாட்டின் ஆரம்ப விடயம் | தரவு ஒழுங்கமைக்கும் செயற்பாட்டின் இறுதி விளைவு |
| தீர்மானங்களுக்கு நேரடியாக பயன்படுத்த முடியாது | தீர்மானங்களுக்கு நேரடியாக பயன்படுத்தலாம் |
| தரவு தரவாக காணப்படும் போது பெறுமதியற்றது | தகவல்கள் பெறுமதியுடையன |
| மூலப் பொருளாகும் | முடிவுப் பொருளாகும் |

இரண்டு விடயங்கள் ஒப்பிட 2 x 1 = 2 புள்ளி கள்

(ஆ) 'அறிவுசார் ஊழியர்' என்பதனை விளக்குவதுடன், அவ்வகை ஊழியர்களுக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.

தொழில்சார் தகைமைகொண்ட ஊழியர்களைக் கருதும்

1 புள்ளி

உதாரணம்:
1. வழக்கறிஞர்
2. கணக்காளர்
3. கணக்காய்வாளர்
4. பொறியியலாளர்
5. ஆசிரியர்
6. வைத்தியர்
7. விமானி
8. கணனி நிரலர்
9. ஏனைய நிறைவேற்று அதிகாரிகள் (White coller jobs)

2 × 1/2 = 1 புள்ளி

(iv) (அ) 'தொழில் விபரம்', 'தொழில் நியமம்' ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

| தொழில் விபரம் / வேலை விபரணம் | தொழில் நியமம் / வேலை குறிப்புரை |
|---|---|
| தொழிலை விபரிக்கும் | தொழிலில் ஈடுபடுவதற்கு பொருத்தமான தனி நபர்களிடம் காணப்படவேண்டிய தகமைகள் தொடர்பான விபரம் |
| தொழிலில் காணப்படும் பண்புகள் தொடர்பான ஆவணம் | தொழிலை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு இருக்க வேண்டிய மானிடப் பண்புகள் தொடர்பான ஆவணம் |
| வேலையின் இயல்பைக் குறிப்பிடும் | வேலை செய்பவருக்கு இருக்க வேண்டிய குணாம்சங்களைக் குறிப்பிடும். |
| வேலை விபரத்தின் ஒரு பகுதி வேலை நியமம் | தொழில் நியமத்தின் ஒரு பகுதியாக தொழில் விபரம் அமையாது |

2 × 1 = 2 புள்ளிகள்

(ஆ) ஊழியர்கள் தொழிற்சங்கங்களில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான காரணங்கள் **இரண்டினை** எழுதுக.

1. நியாயமான சம்பளத்தைப் பெறுவதற்காகவும், சம்பள உயர்வுகளைப் பெறுவதற்காகவும்
2. சிறந்த வேலைச் சூழலைப் பெற
3. வேலை செய்யும் காலம் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளல்
4. தொழில் தொடர்பான ஆரோக்கியமும் தொழில் தொடர்பான ஆபத்துக்களில் இருந்து பாதுகாப்புப் பெறவும்
5. தொழில் பாதுகாப்பைப் பெற
6. கல்வியும் பயிற்சியும் பெற
7. இணக்கப்பாட்டுடன் செயற்பட
8. ஊழியர் உரிமைகளை பெறல்

2 × 1 = 2 புள்ளிகள்

(v) நிறுவனமொன்று சந்தைப்படுத்தல் உதவியாளர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பத்திரிகை விளம்பரமொன்றைப் பிரசுரிக்கும் தீர்மானத்தை மேற்கொண்டது. இவ்வாறு பத்திரிகை விளம்பரமொன்றினூடாக விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்புச் செய்து கொள்வதிலுள்ள அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** விபரிக்குக.

அனுகூலம்

- அதிகளவான தொழில் எதிர்பார்ப்பாளர்களை விண்ணப்பிக்கத் தூண்டுதல்
- குறைந்த கிரயத்துடன் அதிகளவானோரைக் கவரமுடியும்.
- ஏனைய முறைகளுடன் ஒப்பிடும்போது இலகுவானது
- விண்ணப்பதாரர்களுக்கு தொழில் தொடர்பான விரிவான தகவல்களை முன்வைக்க முடிதல், அமைப்பு, முடிவுத் திகதி, வரையறைகள் என்பன உள்ளடக்கப்படுதல்.
- வணிகங்களுக்கு ஏற்றதாக விளம்பரங்களை வேறுபடுத்தி அமைக்க முடிதல்

2 × 1 = 2 புள்ளிகள்

பிரதிகூலம்

- விண்ணப்பத்தைப் பெற அதிக காலம் எடுக்கும்
- பொருத்தமற்ற விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் உருவாகும்
- மிகவும் பொருத்தமானவரை தெரிவு செய்யும் வாய்ப்புத் தவிர்க்கப்படும்.
- அதிகளவிலான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுவதனால் தெரிவு செய்யும் முறைகள் கடினமாக இருப்பதுடன் கிரயமும் நேரமும் அதிகம்

2 × 1 = 2 புள்ளிகள்

**8.** (i) (அ) "நேர்முகத்தேர்வு முறையானது ஊழியர்களைத் தெரிவுசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் பிரபல்யமானதொரு முறையாகும்." இம்முறையின் வரையறைகள் **இரண்டினை** விபரிக்குக.

1. நேர்முகப் பரீட்சை நடாத்துபவர்கள் பாரபட்சமாக செயற்படுவதால் பொருத்தமான நபரைத் தெரிவு செய்வது கடினம்
2. விண்ணப்பதாரிகள் தேவையற்ற பயத்திற்கு உள்ளாதல்.
3. விண்ணப்பதாரி போலியான நடத்தையினை வெளிக்காட்டல் / தானாகவே பிரதிவிம்பத்தை உருவாக்கல்
4. அதிக கிரயம் எடுக்கும்
5. அதிக காலம் எடுக்கும்

2 × 1 = 2 புள்ளிகள்

(ஆ) தகுதிகாண் காலப்பகுதியினுள் தமக்கு வழங்கப்பட்ட கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றத் தவறும் ஊழியர் ஒருவருக்கு எதிராக முகாமைத்துவத்தினால் எடுக்கத்தக்க நடவடிக்கைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (

1. வாய்மொழி மூலம் / எழுத்து மூலம் எச்சரித்தல்
2. தகுதிகாண் காலத்தை நீடித்தல்
3. ஊழியரை வேறு பகுதிக்கு மாற்றுதல்
4. வேலையை முடிவுறுத்தல்

4 × 1/2 = 2 புள்ளிகள்

(ii) நிறுவனமொன்றின் காசு வெளிப்பாய்ச்சலைக் கட்டுப்படுத்தத்தக்க விதங்கள் **நான்கினை** முன்மொழிக.

1. அன்றாடக் கொடுப்பனவுகளைத் தாமதப்படுத்தல்
2. இலாபத்தை நிறுத்தி வைத்தல்
3. கடன் மூலதனத்தைப் பெற்றுக் கொள்வதை வரையறுப்பதன் மூலம் வட்டிக் கொடுப்பனவை வரையறுக்கலாம்
4. மேலதிக ஊழியரைக் குறைப்பதன் மூலம் செலவைக் கட்டுப்படுத்தலாம்
5. நிலைய நிர்வாக செலவுகளைக் கட்டுப்படுத்தல்
6. தேவையின் போது மட்டும் இருப்புக்களை கொள்வனவு செய்தல்

4 × 1 = 4 புள்ளிகள்

(iii) (அ) நிறுவனமொன்றிற்கு தகவல் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

- குறித்த அலகுகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு
- பின்னூட்டல் பெறலாம்
- வாடிக்கையாளர் தொடர்பு அதிகரிக்கும்
- ஊழியர்களுக்கிடையிலான தொடர்பு அதிகரிக்கும்
- சட்டதிட்டங்கள் அமுலாக்கல் இலகு
- புத்தாக்கங்களின் வளர்ச்சி
- தீர்மானங்களை மேற்கொள்வது இலகு

2 × 1 = 2 புள்ளிகள்

(ஆ) வணிகர் ஒருவருக்கு வணிகத் திட்டமொன்று முக்கியமானதாக அமைவதற்கான காரணங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக.

1. வணிகக் கருமங்களைக் கொண்டு நடாத்த வழிகாட்டலாக அமைதல்
2. வணிகம் தொடர்பில் அக்கறைகாட்டும் தரப்பினருக்கு அது தொடர்பான சிறந்த தெளிவினைப் பெற்றுக் கொடுக்க
3. வணிகத்திற்கு தேவையான நிதிவசதிகளைப் பெற்றுக்கொள்ள
4. வணிகத்தினை நடாத்தும்போது ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்கல்
5. எதிர்கால முதலீட்டாளர்களைக் கவர

2 × 1 = 2 புள்ளிகள்

(iv) (அ) சந்தைப்படுத்தல் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படைக் கூறுகளை விபரிக்குக.

1. தொழிற்சாலை, சந்தை என்பவற்றின் பகுப்பாய்வு
2. சந்தைப்படுத்த எதிர்பார்க்கும் பொருள் அல்லது சேவை பற்றிய விபரங்கள்
3. இலக்கு சந்தை
4. போட்டி நிலைமைகளின் பகுப்பாய்வு
5. திட்டமிடப்பட்ட விற்பனைகள்
6. போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் உபாய வழிகள்
7. முயற்சியாளரின் உத்தேச சந்தைப்படுத்தல் உபாய வழிகள்
8. விற்பனையை எதிர்வுகூறல்
9. சந்தைப்படுத்தல் செலவு

4 × 1/2 = 2 புள்ளிகள்

(ஆ) போட்டிசார் பகுப்பாய்வொன்றின்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய காரணிகள் **நான்கினைத்** தருக.

- நடைமுறையில் காணப்படும் போட்டி நிலமை
- போட்டியாளர்களும் அவர்களது பலங்களும்
- போட்டித்தன்மைக்கு முகம் கொடுப்பதற்கு தம்மிடம் காணப்படும் பலங்களும் பலவீனங்களும்
- சந்தைக்குள் பிரவேசிப்பதில் காணப்படும் தடைகள், அதாவது நேரம், கிரயம், தொழில் நுட்பம், ஆக்கவுரிமை, வியாபாரக்குறி

4 × 1/2 = 2 புள்ளிகள்

(v) செயற்றிட்ட மதிப்பீட்டுக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 'செயற்பாட்டிற்கு முந்திய செலவு' என்பதனை விளக்கி, அதற்கான உதாணரங்கள் **இரண்டினைத்** தருக.

செயற்பாட்டுக்கருமங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் தேவைப்படும் செலவுகள் 2 புள்ளிகள்

உதாரணம் : இடத்தை ஒழுங்குபடுத்தும் செலவுகள்

மின்சாரம், நீர் போன்ற வசதி அனுமதிப்பத்திரத்தை பெறும் செலவுகள்

2 × 1 = 2 புள்ளிகள்